

Registered as a News Paper in Ceylon P. M. G. No. H. A. 9/300 of 1953.

விரோதி௵ (1889) ஆவணி௴ 28உ ஆரம்பமானது.

இந்து சாதனம்

ஓம்
சிவமயம்

வெள்ளிதோறும் வெளிவருவது

தனிப்பிரதி விலை: சதம் 10.

[புத்-௭௪] யாழ்ப்பாணம்:- சுபகிருது௵ மார்கழி௴ ௧௩உ வெள்ளிக்கிழமை (28 December. 1962) [இல-௩௮]

"இறைவனை நோக்கி ஓர் அடி- எம்மை நோக்கி ஆயிரம் அடி"

———:0:———

அழுது அடி அடைந்த அன்பர்

[அகிலஇலங்கைச் சைவமகாநாட்டின் முதல் நாள் நிகழ்ச்சிகளுக்குத்தலைமைவகித்த திரு. நா. கிரிதாரிபிரசாத் B A., B.L P. P. A., (Dip) கோயம்புத்தூர் அவர்கள் ஆற்றிய சொற்பொழிவின் சாரம்]

மாண்புமிக்க பெருமக்களே!

தாய்மார்களே!

இன்றைய தினம் ஒரு மகிழ்ச்சியான தினம். "எனக்கும் உனக்கும் என்ன பொருத்தமோ" என இராமலிங்க சுவாமிகள் இறைவனை நோக்கிப் பாடினார். கற்றோர் சபையிலே இவ்வாறான பெருமை பொருந்திய சந்தர்ப்பம் கொடுத்துப் பெருமையளித்ததற்காக மகாநாட்டு நிர்வாகிகளைப் பாராட்ட வேண்டும்.

நாம் இந்த உலகத்திற்கு ஏன் வந்தோம்; இந்த உலகம் நித்தியமானதா என்பதைப் பற்றி நாங்கள் ஆராய்கின்றோமா? "நான் ஆர், என்னுள்ளமார்" என மணிவாசகர் சிந்திப்பதுமாதிரிச் சிந்திக்கின்றோமா?

"பாலனாய்க் கழிந்த நாளும்
பனிமலர்க் கோதைமார்தம்
மேலனாய்க் கழிந்த நாளும்
மெலிவொடு மூப்புவந்து
கோலனாய்க் கழிந்த நாளும்
குறிகோளிலாதுகெட்டேன்"

என்று அப்பர் சுவாமிகள் வருந்துகிறார். உலகத்தில் ஏற்படும் துன்பத்தைப் பார்த்து உலக வாழ்வைவிட்டு விரைவில் செல்லவேண்டுமென விரும்புவோர் பலர். ஆனால் நாம் மனிதராய்ப் பிறந்த இலட்சியம் என்ன என்று கூறுவதுதான் சமயம். அந்த சமய நெறியின் வழிச் செல்வதே வாழ்வதற்கு வழி. "புன்னெறிபதனிற் செல்லும் போக்கினை விலக்கி மேலாம் நன்னெறியொழுகச்செய்து .... என்னையு மடியனாக்கி" என்ற பெரியோர் வாக்கின்படி இறைவன் வழியில் செலுத்துவது சமபநெறி. நல்ல செபலோ கெட்ட செயலோ எதையும் இறைவன் செயலாக மதிக்கவேண்டும். நான் என்ற ஆணவத்தை நீக்க வேண்டும். "நன்றே செய்வாய் பிழை செய்வாய் நானோ இதற்கு நாயகமே" என்றார் மணிவாசகர்.

மணிவாசகரால் பாடியருளப்பட்ட திருவாசகப் கோவை என்பன மிகச் சிறப்புடையன. அதற்கு ஓர் உதாரணம் இறைவன் தம் திருக்கரத்தாலே அதனையெழுதினார். கையொப்பமும் இட்டார்.

"தொழுதகை தலைமேலேறத்
துளும்பு கண்ணீரில் மூழ்கி
அழுதடி யடைந்த அன்பர்"

என்று மணிவாசகரைப் போற்றுகிறார் பரஞ்சோதி முனிவர். இராமகிருஷ்ணரை ஒருவர் கேட்டார் "இறைவனை எப்படிக் காணலாம்"? "அழுதால் காணலாம்"என்று விடையிறுத்தார் இராமகிருஷ்ணர். "அழுதேன் வரவில்லையே?" என்றார் அன்பர்.

அழுவதென்பது தனிமையில், இருட்டில், உனக்கென்று ஒன்றொழித்து அழு; இறைவன் வருவான்" என்றார் இராமகிருஷ்ணர். மனிதன் பரிசுத்தம் எளிமை என்னும் இரு சிறகுகளில் பறக்க வேண்டுமென்பது இராமகிருஷ்ணர் கருத்து. இந்த இரண்டு தன்மைகளையும் அடிப்படையாகக் கொண்ட அழுகையே இறைவனைக் கிட்டவல்லது. திருவாசகமென்பது பனிப்பாதுகாப்புப்பெட்டியால் மூடப்பெற்ற கண்ணீர் நிறைந்த செல்வம் கோடை காணாத முகில் போன்றது. ஒருமுறை இராமலிங்க சுவாமிகளை ஒருவர் திருவாசகத்திற்கு விளக்கம் கேட்டார். அவர் ஒரு துண்டு வெறும் காகிதத்தைக் கொடுத்தார். அதில் ஒன்றும் தெரியவில்லையே என்றார் அன்பர். உற்றுப்பார்க்கும்படி கூறினார். ஒருதுளி நீர் தெரிகிறது என்றார். ஆம்! அது கண்ணீர்த்துளி, அதுதான் திருவாசகத்தின் பொருள் என்றார் இராமலிங்க சுவாமிகள்,

பல்லாயிரக் கணக்கான ஆண்டுகளாக ரிஷிகள் விட்டுச் சென்ற வேதங்களின் விளக்கம் திருவாசகத்தில் உள்ளது. உலகத்திலே பல இன்பங்கள் உள்ளதெனக் கூறுவார்கள். சிலபேர் பணம் சேர்த்தல் இன்பம் என்பார்கள். சிலர் பெரிய பதவியே இன்பம் என்பார்கள். ஆனால் எல்லாவற்றிலும் பார்க்கக் கூடிய இன்பம், இலக்கியம் படித்து அதன்மூலம் இறைவனை அடைவதேயாகும் என்றார் மேரிக்கியூரி அம்மையார். இராமலிங்கசுவாமிகள் "வான் கலந்த மாணிக்க வாசக நின் வாசகத்தை யான் கலந்து பாடுங்கால் என்று கூறுகிறார். அந்த இலக்கியத்துடனும் இறைவனுடனும் கலக்க வேண்டும்.

"மலத்திலேகிடந்தேன் றனை
யெடுத்து
அருளி மன்னிய வடிவளித்
தறிஞர்
குலத்திலே பயிலுந் தரமும்
இங்கெனக்குக்
கொடுத்துளே விளங்கு
சற்குருவே"

என்று இராமலிங்க சுவாமிகள் கூறுகிறார். திருவாசகத்திலே கலந்தால் பின் மீள

தொடர்ச்சி 6-ம் பக்கம்)

நற் சிந்தனை

நன்றுதீ தென்று
நாடாமல் நாடினால்
குன்றின்மேல் வைத்த
விளக்கின் கொள்கையே,

உ

ஆதியு மந்தமு மில்லா அரும்பெருஞ் சோதியை
யாம்பாடக் கேட்டேயும் வாட்டடங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன்வார்கழல்கள் வாழ்த்தியவாழ்த்தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்ம்மறந்து
போதா ரமளியின்மே னின்றும் புரண்டிங்ஙன்
ஏதேனு மாகாள் கிடந்தா ளென்னே யென்னே
ஈதே யெந்தோழி பரிசேலோ ரெம்பாவாய்.

கலாச்சாரத் தொடர்பையுமா கத்தரிக்க வேண்டும்

———0———

அகில இலங்கைச் சைவமகாநாட்டுத் தீர்மானங்கள்

1. இந்த மகாநாடு, பிரேரிக்கப்பட்டுள்ள இந்து கலாச்சாரப் பல்கலைக் கழகம் நிறுவும் யோசனையை விரைவில் செயல்படுத்தும்படி அரசினரை ஏகமனதாக வேண்டிக்கொள்கிறது.

2, அதிகமான மாணவர்கள் சைவ சமயிகளாக உள்ள பாடசாலைகளுக்குத் தலைமை ஆசிரியர்களாக சைவ சமயத்தவர்களையே நியமிக்க வேண்டும் என்றும் இந்த மகாநாடு சம்பந்தப்பட்டவர்களைக் கேட்டுக் கொள்கிறது.

3. அரசாங்கத்தால் பொறுப் பேற்கப்பட்டுள்ள பாடசாலைகளைச் சேர்ந்த கோயில்களும், மடாலயங்களும் அவற்றின் நோக்கத்துக்கே பயன்படுத்தப்படுவதோடு அவற்றினின்றும் தருமச்சொத்துக்களிலிருந்தும் கிடைக்கும் வருமானமும் சிறப்பாக அந்த நிறுவனங்களைப் பேணவும் அவற்றின் நோக்கங்களை நிறைவேற்றவுமே பயன்படுத்தப் படவேண்டும்,

4. "சைவ" சமயிகளால் புண்ணிய பிறவியாகப் போற்றப்படுகின்ற ஆவினங்களை நம்மவர்கள் அறியாமையினால் மாமிசவுணவுக்காக விற்பனை செய்கின்றார்கள். மாமிச விற்பனைக் கடைகள் நமது நாட்டில் பல பாகங்களில் திறக்கப் படுகின்றன. அதனால் மக்கள் சிலர் கோமாமிச பக்ஷணிகளாக மாறுகின்றார்கள். இக்கொடிய மாபாவ

(தொடர்ச்சி 6-ம் பக்கம்)

நல்லைக்கீர்த்தனம் — 27.

பற்றிய வெவ்வினைகள் அற்றிடுமே!

★

— யாழ்ப்பாணம் ந. வீரமணி —

இராகம் : மோகனம் : தாளம் : ஆதி

பல்லவி

வெற்றிவே லாயுதனை நித்திய முந்துதிக்க
பற்றிய வெவ்வினைகள் அற்றிடுமே — மனமே

அனுபல்லவி

நெற்றியில் நீறணிந்து நேராமெல் லாம்நினைந்து
எத்திசையும் புகழும் எழில்நல்லை தானடைந்து

சரணம்

அருணகிரி முனிக்கு அருந்தமிழ் அளித்தவன்
அவ்வைக் கினியகனி அருள்தந்து களித்தவன்
பெருமுனி யகத்தியன் பேரன்பில் திளைத்தவன்
பெம்மான்சிவனின் நுதல்பிழம்பிலேமுளைத்தவன்

“நால்வர் காட்டிய வழி”

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவரானினம்
வீழ்கதண்புனல்வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல்லா மரனுமமே
சூழ்க வையகமும் துயர் தீர்கவே.
திருச்சிற்றம்பலம்

இந்துசாதனம்

சுபகிருது ௵ மார்கழி ௴
௧௩௳ வெள்ளிக்கிழமை

மாநாடு காட்டிய வழி

நின் திருவருளே பேசின் அல்லாற் பேசாத நாளெல்லாம் பிறவா நாளே என்ற திருமுறைத் திருமொழிப்படி தொண்டர்தம் பெருமையைப் பேசிச் சைவ நன்னெறியை ஓங்க வைக்கும் பணியில் மூன்று நாட்களாக நாவலர் ஆச்சிரம மண்டபத்திற் கூடிய அன்பர்கள் பிறவா நாட்களைக் குறைத்த புண்ணியஞ் செய்தனர். மாநாட்டிற் சைவம் காத்த மங்கையர்கள் மாண்புடைய குரவர்கள் ஆகியோரின் திருநெறியையும் அவர்கள் அருளிய அமுதத் திருமுறைகளையும் எடுத்துச் சொற்பெருக்காற்றிய கற்றோர் சித்தமொருக்கிச் சிவாய நம என்றிருக்கும் செம்மையை நன்குணர்த்தினர். தாய்மொழி தமிழுமொழியில்லாதிருந்தும் அம்மொழியிலுள்ள ஞானநூல் நீதிநூல் யாவும் ஆய்ந்துணர்ந்து சைவநெறி விளக்கிய திருவாளர் கிரிதாரி பிரசாதவர்களும் சைவ மங்கையர் திலகங்களின் தெய்வப்பணியின் சீரைத் திறம்பெற உரைத்த காமாட்சியம்மையாரும் மாநாட்டு விருந்தினராகவமைந்த சிறப்பு மிகப் பொருத்தமானது.

சொற்பொழிவுடனமையாது நற்சமய நெறிகாட்டவல்லது; சாதனையேமிகவும் வேண்டப்படுவது எனத் திகழ்ந்தது மாநாடு. அந்த முறையிலே சைவ மாணாக்கர்கள் சைவச் சூழலில் கல்வி கற்று ஒழுகி வருவதற்குச் சைவாசிரியர்களே வழிகாட்டிகளாக அமைதல் வேண்டுமென்றும் சைவச் சால்பு ஓங்கப் பல்கலைக் கழகம் நிறுவப் பெறுதல் வேண்டுமென்றும் கல்விக் கழகங்களோடிணைந்த கோயில்கள் மடாலயங்கள் அந்த நோக்கங்களுக்குப் பயன்பெறும் வண்ணம் பிரிவிடப்பட்டுப் பேணப்பெறவேண்டுமென்றும் அவற்றின் வருவாய் அத்தருமப்பணிக்கே யுரியதாய் ஒதுக்கப்படுதல்வேண்டும் என்றும் சைவாதீனம் ஈழத்தில் நிறுவப்பெற வேண்டுமென்றும் மாநாடு முடிவுசெய்தது. அம்முடிவு செயலில் அமைய முயற்சி செய்வதற்கு யோசனையும் கூறியது.

இன்னும் மேலாகக் கோக்கொலையென்னும் மாபாதகத்தை இல்லாதொழிக்கத் தீவிரமாக உழைக்க வேண்டுமென்றும் ஒரு தீர்மானம் செய்யப்பட்டது. அன்பு மார்க்கம் சைவமார்க்கம் என்று அல்லும் பகலும் சொல்லிக்கொண்டு கொல்லுந்தொழிலில் ஈடுபடும் கொலைஞர்களையும், அப்பழியேற்றுவோருக்கு உறுதுணையாயிருக்கின்றவர்களையும் கண்டு மனந்துடியாது நெஞ்சம் நடுங்காதிருக்கின்றவர்கள் சைவமக்களாவார்களா? “அம்மா என அலற ஆவுயிரைப் போக்கும்” இம்மானுடரா எமமனோர் ஆவார். கொலையென்றாலே உள்ளங்குலைந்து உணர்வு கெட்டு, நிலைதடுமாறி நிற்கும் இயல்பினர் ஆகியவர்கள் கோக்கொலையென்றால் என்ன பாடுபட வேண்டியவர்கள். பஞ்சமாபாதகங்களுள் முதலாவது பழிச்செயலாகக் கருதப்படும் கொலை, அதிலும கோக்கொலையென்றால் இது என்ன கொடுமை! நான்மறை நினைவெங்கே, சிவாகமச் சிந்தையெங்கே, நால்வர் காட்டிய நன்னெறியெங்கே, நாயன்மாரின் நற்றவ வாழ்க்கையெங்கே, நாவலர் அவர்கள் இடித்துரைத்துணர்த்திய பாடங்கள் எங்கே?

பொருந்தும் புனித உணவை அருந்தும் பண்புடைய சைவ நன்மக்கள் இந்தப் பழிச் சொல் கேட்டு வாளாவிருப்பார்களா? கோக்கொலையைக் கண்டிக்கின்றோம் என்று வாக்கினாற் றொண்டாற்றுவது போதாது. சைவ அன்பர்களே சென்றிடுவீர் தேசமெங்கும் தெய்வநெறிச் செம்மையை விளக்கிக்காட்டுவீர். கொல்லாமை விரதத்தைக் குவலயத்தில் நிலைபெற நாட்டுவீர்.

இலட்சியப் பாதையில் துணைபுரியும் ஊன்றுகோல்கள் ஆன்றோர் வாக்குகள்

[அகில இலங்கைச் சைவமகாநாட்டில் “நால்வர் காட்டிய வழி” என்னும் பொருள்பற்றி ஸ்ரீமதி. கு, காமாட்சியம்மையார் M A. தமிழ் விரிவுரையாளர், அரசினர் கல்லூரி சேலம் அவர்கள் ஆற்றிய விரிவுரைச் சுருக்கம்,]

மானிடப் பிறவியை அடைந்தவர்கள் ஏன் நாம் இப்பிறவியை அடைந்தோம் என்பதைச் சிந்திக்க வேண்டும். இதை திருநாவுக்கரசரே சிந்தித்து ‘குலம் பொல்லேன்” என்னும் தேவாரத்தின் இறுதியில் “என்செய்வான் றோன்றினேன்” என்று கேட்டுள்ளார். பிறர் குற்றங்களைத் தம்மேல் ஏற்றிப் பாடுவது அடியார் இயல்பு. அவ்வாறே திருநாவுக்கரசர் குலம் பொல்லேன் குணம் குறியும்பொல்லேன் என்று கூறுகிறார். வாழ்க்கையில் ஒரு குறிக்கோள் அவசியம். தம் வாழ்க்கை நிலைக்கும் சூழ்நிலைக்கும் ஏற்ப ஒவ்வோர் குறிக்கோளை உண்டாக்கிக் கொண்டார்கள் சமயப்பெரியோர்கள். சிவனடியார்க்கு ஓடு கொடுத்தார் ஒரு தொண்டர். இலவசத் துணி கொடுத்தார் ஒரு அன்பர். “குறிக்கோள் இல்லாது கெட்டேன்” என வருந்தினார்கள் பெரியோர்கள். இந்தக் குறிக்கோள் என்ன என்பதற்கு வழிகாட்டிகள் உள்ளனர் அவர்கள்தான் நால்வர். ஒருவகைக்கு அவர்களை நாம் வாழ்க்கையில் நமது குறிக்கோளை நோக்கிச் செல்லும்போது வழுக்கி விழாமற் காக்கும் ஊன்றுகோல் என்று கூறலாம். பெரியோர் வாய்ச்சொல் நம்ஊன்றுகோல் என்பதை,

“இழுக்கல் உடையுழி
ஊன்றுகோல் அற்றே
ஒழுக்கம் உடையார்
வாய்ச்சொல்”

என்று வள்ளுவர் எடுத்துக் கூறுகிறார்.

அவர்கள் காட்டும் வழிதான் என்ன? அவர்கள் காட்டும் வழிகள் நான்கு எனப் பெரியோர் கூறுவர் சரியை சரீரத்தினால் தொண்டு செய்தல் அலகிடல், மெழுகல், கோலமிடுதல், நந்தவனம் வைத்தல்.

இரண்டாவது கிரியை. இறைவன் திருமேனியைத் தொட்டுத் தொண்டு செய்தல். மாலை சாத்தல் திருமுழுக்காட்டுதல் முதலியன.

மூன்றாவது யோகம் இறைவனையும் அறிவையும் சேர்த்தல். பிடித்து வைத்தல். இவை மூன்றிலும் பெற்ற அறிவே ஞானம் எனப்படும். இவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு வகையில் சிறந்தன. இவற்றை தாயுமானவர் அரும்பு காய் கனியாக உவமித்தார். இதைச் சித்தாந்த நூலாகிய சித்தியார் சன்மார்க்க சகமார்க்கம் சற்புத்திர மார்க்கம் தாசமார்க்கம் என்று கூறும் நால்வரின் பாடல்களாகிய சோலையிலே புகுந்தால் நாம் பல நல்ல கருத்துக்களைக் காணலாம். கடவுள் எங்கிருக்கிறார் என்பது சாதாரணமாய் யாவரும் கேட்கும் கேள்வி. அப்பர் அதற்கு விடைசொல்கிறார்.

‘‘விறகிற்றீயினன்
பாலிற்படுநெய்போல்
மறைய நின்றுளன்
மாமணிச் சோதியான்’

அவ்வாறாகிய இறைவனை எவ்வாறு பெறலாம்.

‘‘உறவுக்கோல்
நட்டுணர்வு கயிற்றினால்
முறுகவாங்கிக்
கடையமுன்னிற்குமே’

என்று வழியையும் காட்டுகிறார். முறுக வாங்கி என்

மனிதனை வழிப்படுத்தத் தாம் சிவவாழ்வுவாழ்ந்தவர் அப்பர்

[அகில இலங்கைச் சைவமகாநாட்டின் மூன்றும் நாளில் “வாகீசா வாக்கு” என்னும் பொருள்பற்றி திரு. நா. கிரிதாரி பிரசாத் சௌரவ நீதிபதி, கோயம்புத்தூர், B.A. B L, P.P.A. (Dip) அவர்கள் ஆற்றிய சொற்பொழிவின் சாரம்.]

(இந்துசாதன அபிமான நிருபர், அன்பர்
பிரம்மஸ்ரீ. வ, குகசர்மா அவர்கள் தொகுத்துதவியது.)

“எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்” என்று சொன்னார் மணிவாசகர். மானிடப் பிறப்பு மிக அரிது. அதிலும் மனிதருக்குள்ளே மனிதராய்ப் பிறப்பது மிக வரிது. அதிலும் அப்பர் பெருமானே விளங்க முடியாத ஓரிடத்திலிருந்து புறப்பட்ட பேரொளி பூமியில் வந்து தங்கியது எனக் கொள்ளலாம். மனிதனிடத்திலே இருக்கவேண்டிய நற்பண்புகள் எல்லாம் நாகரிகம் எல்லாம் சேர்ந்த அந்த உருவந்தான் அப்பர்.

கவிதாகூர் கூறினார் ஒரு மனிதனுடைய தோளைத் தொட்டுவிடு நீ உலகத்தையே தொட்டுவிடலாம் இந்த உதாரணப்படி இறைவன் உள்ளத்தையே தொட்டவர் அப்பர். இறைவனை மனதால் தொடவேண்டும். “சிந்தனையும் நினக்காக்கி” என்பது ஆன்றோர் வாக்கு. அதனாலே அப்பர் வாக்கு நெஞ்சத்தைத் தொட்டிழுத்து உறவு நரம்பைத் தொட்டுவிடக்கூடியதாய் இருக்கிறது. “நான் வடமொழியாகிய ஹிந்தியைச் சொந்த மொழியாக வுடையேன். ஆங்கிலமும் வேறும் இந்திய மொழிகளும் கற்றேன். “ஆண்டவனிடத்தே நம்மை இழுத்துச் சென்று அவரின் அருளைப் பெறச் செய்யும் தன்மை தமிழ்ப் பனுவல்களுக்குத்தான் உண்டு. ஏன்? அவ்வளவு மனப் பரிசுத்தம், மன அழகு நிறைந்தவர்களாலே அவை பாடப்பட்டன. சித்தமழகியார் பாடாரோ நம்சிவனை” என்று கூறினார் மணிவாசகர். இப்பாடல்களைப் படிக்கும்பொழுது ஒரு ஆனந்த வட்டத்தில் சுழல்வதுபோலவும், ஆயிரமாயிர மாண்டுகளாக பல பிறவிகளில் செய்த பாவங்கள் கரைந்து போவது போலவும் இருக்கிறது. நம்மைப்பற்றி அதிகம் நினைக்க இறைவனைப் பற்றிய சிந்தனை குறையும்,

மனிதனை நல்வழிப்படுத்த வேண்டுமென்ற பெருங்கருணையினாலே அப்பர் தம் வாழ்நாளில் சிவ வாழ்வை

(தொடர்ச்சி 5-ம் பக்கம்)

பது திறம் சாதனையைக் காட்டுகிறது. எவ்விதமென்றாலும் ஒரு உறவை ஏற்படுத்தவேண்டுமென்பதே நால்வரின் கொள்கை அதுதான் அவர்கள் காட்டும் முதல்வழி.

“இடரினும் தளரினும்
எனதுறுநோய்
தொடரினும் உன்கழல்
தொழுதெழுவேன்”

என்று கூறுகிறார் ஞானசம்பந்தர். “வழுக்கி வீழினும் நின்திருப் பெயரல்லால் மற்றறியேன்” என்றார் சுந்தரர். “ஆயிரம் திருநாமம் பாடிநாம் தெள்ளேணம் கொட்டாமோ” என்றார் மணிவாசகர். உறவை ஏற்படுத்தியபின் அவர் நாமத்தைச் சொல்லவேண்டும. அதுவும் இன்பத்திலும் துன்பத்திலும் சொல்ல வேண்டும் என்பது அவர்கள் காட்டும் இரண்டாவது வழி. இதை நாம் மேற்கூறிய அடிகளிற் கண்டோம்.

மாக்களில் இருந்து மக்கள் வந்தார்கள் என்பது டார்வின் தத்துவம். மாக்கள் மக்களாகி மக்கள் மகளாக வேண்டும், அதாவது உள்ளத்தளவில் பெண்தன்மையடைபவர்களே இறைவனை அடையமுடியும். “முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள்” என்னும் அப்பர் வாக்கு இதனை வலியுறுத்தும். அப்பர் தமது தலை முதலிய ஒவ்வோர் உறுப்பையும் இறைவனுக்குத் தொண்டு செய்யும்படி கேட்கிறார். இதனாலே உடம்பைச சிவனுக்காக்கு என்பது அவர்கள் காட்டும் மூன்றாவது வழியாகும்.

நாலாவது சரணாகதித் தத்துவம் அல்லது தாள் தலைத்தத்துவம் என்றும் கூறப்படும. தமிழில் உள்ள ட என்னும் எழுத்து மேற்கீறு இறைவனையும் கீழேயுள்ள கீறு அடியார் வீழ்ந்து வணங்குவதையும் குறிப்பது. ‘யாரொடு நோவேன் யார்க்கெடுத்துரைப்பேன்”. “அன்றே என்தன் ஆவியும் உடலும் உடைமை எல்லாமும குன்றேயனையாய் எனை ஆட்கொண்டபோதே கொண்டிலையோ” எனும் திருவாசக அடிகள் சரணாகதித் தத்துவத்தை நன்கு விளக்குவன.

இந்த நான்கு வழிகளுஞ் சிறந்ததென்பதை,

‘இல்லறத் தினல்லேன்
இயற்கைத் துறவியல்
[லேன்
நல்லறத்தின் ஞானியல்
[லேன்
நாயேன்”

என்று பிறர் கூறுவதினாலும் விளங்கும்.

தொகுத்து உதவியவர்
ஸ்ரீ வ. குகசர்மா

தமிழனுக்கு என்று ஒரு பொது அறம் திருக்குறள்

அது உலகமுழுமைக்குமே பொதுவான அறமாகத் திகழ்கின்றது

[அகில இலங்கைச் சைவமகாநாட்டின் இரண்டாம் நாளில் வள்ளுவரும் சமயமும் என்னும் பொருள்பற்றி, திரு. நா கிரிதாரி பிரசாத் B A., B.L P. P. A., (Dip) கோயம்புத்தூர் அவர்கள் ஆற்றிய சொற்பொழிவின் சாரம்.]

(இந்துசாதன அபிமான நிருபர் அன்பர் பிரம்மஸ்ரீ வ. குகசர்மா அவர்கள் தொகுத்துதவியது)

திருவள்ளுவரைப்பற்றிப் பேசுவது ஒரு விவாதத்திற்குரிய விஷயமாக இருக்கிறது. வள்ளுவர் மயிலாப்பூரில்தான் தோன்றியவரா? அவர்தான் குறளை ஆக்கினாரா? என்றெல்லாம் ஆராய்கிறார்கள் அவரைச் சைவர் என்று கூறுகிறார்கள். வைணவர் என்று கூறுகிறார்கள். பௌத்தர் என்றும் கூறுகிறார்கள். வள்ளுவர் உலகத்தின் சார்பாகத் தோன்றிய பிரதிநிதி அவரைச் சமயக் கண்கொண்டு நோக்கினால் அவரை ஒரு கோணத்திலேதான் நாம் அறிய முடியும்.

சுமார் இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னே வாழ்ந்த தமிழன் நாகரீகத்திற்குத் திருக்குறள் அத்தாட்சியாயிருக்கிறது. தமிழ பண்பாட்டின் சிகரமாக - நாகரீகத்தின் சின்னமாக ஞானத்தின் அடையாளமாக அதைக் கொள்ளலாம். வள்ளுவன் குறளை எப்படியும் பொருள் கொள்ளலாம். ஆனால் அப்படிச் செய்வதினால் ஆபத்தும் நிரம்பியுள்ளது.

வான்புகழ்கொண்டவள்ளுவன் நூல் ஏன் சிறப்புடையது? தமிழனுடைய பழைய நாகரீகத்தை எடுத்துப் பேசுகிறது. மனிதன் எப்படி வாழ வேண்டும் என்பதற்கு வழி காட்டுகிறது. இப்போது விஞ்ஞானம் வளர்ச்சியடைந்துவிட்டது. அடுத்தவனை எவ்வாறு கொல்வது என்பதைப் பற்றி விஞ்ஞானம் பிரதானமாகக்கூறுகிறது. விஞ்ஞானத்துடன் கூடவே அஞ்ஞானமும் வளர்கின்றது. ஐயாயிரம் வருடங்களாக எழுதப்பட்டுவந்த நூல்களெல்லாம் திருப்பி எழுதப்பட வேண்டிய நிலை இன்று ஏற்பட்டுள்ளது என் ஒரு பெரியார் கூறியுள்ளார். திருக்குறளை எடுத்துக்கொண்டால் அது என்றும் தளப்பமில்லாத நூலாகத் தோற்றுகிறது. சமயச் சார்பிலே நின்று பார்த்தால், திருவாசகத்தைப் போலவும் நால்வர் கருத்தைப் போலவும் கருத்துக்கள் உள்ளனவா என்று பார்த்தால் "ஆம்" என்றும் சொல்லலாம். "இல்லை" என்றும் சொல்லலாம். ஆனால் அவற்றைப் போல உருக்கம்இல்லை. சமயாசாரியர்கள் குறளின் கருத்தை எடுத்தாண்டுள்ளார்கள். ஆனால் ஆழ்ந்த சமயக் கருத்துகள் குறளில் உள்ளனவா என்பது கேள்வி.

வள்ளுவர் ஏன் குறளை யாத்தார்? வள்ளுவர் காலத்தில் பல ஸ்மிருதிகள் நடைமுறையில் இருந்தன அவை ஒரு சாதிக்கு ஒரு வகுப்பாருக்கு ஒவ்வொரு புறம்பான நீதியை எடுத்துக் கூறின. வள்ளுவருக்கு இது நீதியாகத் தோன்றவில்லை. தமிழனுக்கு என்று ஒரு பொது அறமாக்க வேண்டும். அது எல்லாக் குலத்திற்கும் பொதுவாக வேண்டும் என்று விரும்பினார். எனவே அறம் பொருள் இன்பத்தை அடிப்படையாகக் கொண்டு புது நூலை உண்டாக்கினார்.

அந்தணன் என்பதற்கே 'அந்தணர் என்போர் அறவோர் மற்று எவ்வுயிர்க்கும், செந்தண்மை பூண்டொழுகலால்" என்று ஒரு புது இலக்கணம் வகுத்தார். மனுஸ்மிருதி பராசஸ்மிருதி முதலிய ஸ்மிருதிகளில் சொல்லிய அறங்களையெல்லாம் செதுக்கிப் புதுத்தோற்றம் கொடுத்துப் புதிய உருவுள்ள அறங்களாக அமைத்தார். "ஆசைக்கோர் அளவில்லை" என்றார் தாயுமானவர். "அவாவறுத்தல்" என்னும் அதிகாரத்தில் ஆசையின் தீமைகளை எடுத்துக் கூறுகிறார் வள்ளுவர், "ஊழிற் பெருவலி யாவுள" என்று கூறிய வள்ளுவர் ஊழை நம்பி மனிதன் முயற்சியற்று இருந்துவிடுவானே என எண்ணி,

"ஊழையும் உப்பக்கம்
காண்பர் உலைவின்றித்
தாழாது உஞற்றுபவர்"

என்று கூறியுள்ளார். ஆண்மை வலிமை, அரசநீதி என்பவற்றையும் கூறியுள்ளார் வள்ளுவர். எல்லாவற்றிற்கும் மத்தியாக, நடுநாயகமாகத் திருவள்ளுவர் பாடிய குறள் ஏதேனும் உண்டா என்பதை ஆராய்ந்து பார்த்தால் ஆம் என்றே கூறலாம், அந்தக்குறள் எல்லாச் சமயத்தின் உண்மைகளையும் தன்னுள் அடக்கியது. எல்லாராலும் கைக்கொள்ளக்கூடியது.

'ஒன்றாகநல்லதுகொல்லாமை
மற்று அதன்
பின்சாரப் பொய்யாமை
நன்று'

இந்தச் சிறந்த கருத்தை எங்கிருந்து எடுத்தார்? ஈயெறும்பு புழுக்களுக்கும் இரக்கம் காட்டி வாழ்ந்தவன் தமிழன், "ஏழையைக் கண்டிங்கிளைத்தேன்" என்கிறார் இராமலிங்க சுவாமிகள். கொல்லாமை என்பது சத்தியம். இந்த இரண்டு உண்மைகளையும் விளக்கவே மகாத்மாகாந்தி பூமியில் அவதரித்தார். எந்தச் சமயத்தவரும் இதற்கு மாறு கூற முடியாது. பகவத்கீதையின் பதினாறும் அதிகாரத்தில் "கொல்லாமை வாய்மை" முதலிய குணங்கள் தெய்வ சம்பந்தத்தை எய்தியவனிடம் காணப்படுகின்றன. என்று பகவான் கூறுகிறார். அர்த்த சாத்திரமும், இன்பசாத்திரமும் திருவள்ளுவருக்கு நன்கு தெரிந்தவை; அவற்றை நல்ல முறையில் தமது குறளில் அமைத்துள்ளார்.

உருவ வழிபாட்டில் வள்ளுவருக்கு நம்பிக்கை உண்டு ஆனால் உருவத்தின் முழுமையையும் எடுத்துக்கூறினால் சமயசச்சரவு ஏற்படும் என்று போலும், நாம் வணங்க வேண்டிய பிரதான அங்கமாகிய பாதங்களைப்பற்றி மாத்திரம் கூறியுள்ளார், "தாளை வணங்காத்தலை" மாண் அடி சேர்ந்தார் என்று பலவகையாக அடிகளை வியந்து கூறியுள்ளார். ——

திருக்கேதீச்சரத்தில் திருவாசக விழா

எதிர் வரும் 31-12-62 திங்களில் இருந்து 9-1-63 புதன் வரையுள்ள திருவெம்பாவைத் திருநாட்கள் பத்திலும் திருக்கேதீச்சரம் திருவாசக மண்டபத்தில்திருவாசகவிழாவும் சாதனையும் நடைபெற இருக்கின்றன.

1963 ஆங்கில தை 4-ம், 5-ம், 6-ம் திகதிகளில் நடைபெறும் திருவாசக விழாவில் தமிழ்மறைக் கழகத் தலைவர் பண்டிதர், கா. பொ. இரத்தினம், M A. கலைமகள் ஆசிரியர் கி. வா. ஜகநாதன் M A., ஆத்மஜோதி ஆசிரியர் நா. முத்தையா முதலிய அறிஞர் பலரின் சொற்பொழிவுகளும், பிரபல இசை வல்லுநர்களின் இசைக்கச்சேரிகளும் நடைபெற இருக்கின்றன.

——

Visit
GOLD HOUSE
for Jewels
எஸ். கே. எஸ். பிரதர்ஸ் தங்க மாளிகை
யாழ்ப்பாணம்
PHONE: 181
GRAMS: JEWELLERS

திருவதிகை - மனவாசகங்கடந்தார்

அருளிச் செய்த

உண்மை விளக்கம்

மூலமும் உரையும்

[சித்தாந்த பண்டிதர், சைவப்புலவர் இ. செல்லத்துரை]

(முற்றொடர் - 3)

I. ஆருறு தத்துவம்:

ஐம்பூத நிறமும் எழுத்தும்

பொன்பார் புனல் வெண்மை பொங்கு மனல்சிவப்பு
வன்கால் கருமைவளர் வான்றூமம் — என்பார்
எழுத்து லவரயவப் பாராதிக் கென்றும்
அழுத்தமாய் நிற்கு மது. 5.

கொ—கூ; பார் பொன், புனல் வெண்மை, பொங்கும் அனல் சிவப்பு, வன்கால் கருமை, வளர்வான் தூமம், என்பார்; பார் ஆதிக்கு எழுத்து லவரய அ; அது என்றும் அழுத்தமாய் நிற்கும்.

ப—ரை; பார் பொன்-நிலம் பொன்நிறமானது, புனல் வெண்மை - நீர் வெண்மை நிறமானது, பொங்கும் அனல் சிவப்பு - மேல் எழுந்து எரிகின்ற தீ சிவப்பு நிறமானது, வன்கால் கருமை - வலிமை பொருந்திய காற்று கருமையானது, வளர் வான் தூமம் - மேன்மேலும் விரிந்து செல்வதாய்க் காணப்படும் ஆகாயம் புகை நிறமானது, என்பார்- என்று பெரியோர் கூறுவார்கள், பார் ஆதிக்கு எழுத்து லவரய அ - நிலத்துக்கு லகர முப் நீருக்கு வகரமும் தீயுக்கு யகரமும் காற்றுக்கு ரகரமும் ஆகாயத்துக்கு அகரமும் பொருந்திய எழுத்துக்களாம், அது என்றும் அழுத்தமாய் நிற்கும்- அவ்வெழுத்துக்கள் எப்போதும் அவற்றை உறுதியாகப் பொருந்தி நிற்பனவாம்.

பொழிப்பு: நிலம் நீர் தீ காற்று ஆகாயம் ஆகிய ஐம்பூதங்களுக்கும் முறையே பொன், வெண்மை, சிவப்பு, கருமை, தூமம் ஐந்தும் உரிய நிறங்களாம்; லவரயஅ ஐந்தும் அழுத்தமாய்ப் பொருந்திய எழுத்துக்களாம்.

ஐம்பூத அடையாளம்

குறிகுலிசங் கோகநதங் கொள்சுவத்தி குன்று
அறுபுள்ளி யாரமுத விந்துப் — பிறிவின்றி
மண்புனல்தீக் கால்வானம் மன்னும் அடைவேயேன்
றெண்புதல்வா வாகமமோ தும், 6.

கொ - கூ: ஒண்புதல்வா, மண்புனல் தீ கால் வானம் (என்பவற்றின்) குறி அடைவே: குலிசம், கோகநதம், கொள் சுவத்தி, குன்று அறுபுள்ளி, ஆர் அமுத விந்து; (இவை) பிறிவு இன்றி மன்னும் என்று ஆகமம் ஓதும்.

தொடர்ச்சி 4-ம் பக்கம்

இவ்வாரம் உங்கள்

(-4ம் பக்கத் தொடர்ச்சி)

வேலை வழமையிலும் கூடுதலாயிருக்கும்.

மகாராசி உத்தராடம் 2, 3, 4ம் பாதம் திருவோணம் அவிட்டம் 1, 2ம் பாதம்.

புதியமுயற்சிகளில் வெற்றி நிச்சயம். பண இலாபங்களும் நிச்சயம். ஆனால் குடும்ப நிலைமை அவ்வளவு திருப்தியாக இருக்காது. உடல்நிலையும் ஊறுபடும்.

கும்பராசி அவிட்டம் 3, 4ம் பாதம், சதயம், பூரட்டாதி 1, 2, 3ம் பாதம்.

குடும்பச் சச்சரவுகளுக்கு இடமுண்டு. தொழிலளவில் நல்ல வாரம். பண இலாடங்கள் நிச்சயம். எதிரிகளுக்கு இன்னல் ஏற்படும். தூற்றித் திரிவோர்பற்றி எச்சரிக்கையாக இருக்கவும்.

மீனராசி பூரட்டாதி 4, உத்தரட்டாதி ரேவதி.

உடல்நிலை மேலும் பிரச்சினையே. மன அமைதி இருக்காது. தொழிலளவில் நல்ல வாரம். எதிரிகளுக்கு இன்னலும் பண இலாபமும்நிச்சயம்.

உண்மை விளக்கம்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

ப - ரை: ஒண் புதல்வா - நல்ல மாணவகனே, மண் புனல் தீ கால் வானம் (என்பவற்றின்) குறி:- நிலம் நீர் தீ காற்று ஆகாயம் என்பவற்றின் அடையாளம், அடைவே- முறையே, குலிசம் - வச்சிரமும், கோகநதம் - தாமரைமலரும், கொள்சுவத்தி - பொருந்திய சுவத்திகமும், குன்று அறுபுள்ளி - குறைவுபடாத ஆறுபுள்ளியும், ஆர் அமுத விந்து - பொருந்திய அமுதத் துளியும் ஆகும்; (இவை) பிறிவு இன்றி மன்னும் என்று ஆகமம் ஓதும் - இவை வேறுபடுதலின்றிப் பொருந்தி நிலைபெற்றிருக்கும் என்று ஆகமம் உரைக்கும்.

பொழிப்பு; நிலம் நீர் தீ காற்று ஆகாயம் ஆகிய ஐம்பூதங்களுக்கும் முறையே வச்சிரம், தாமரைமலர், சுவத்திகம், அறுபுள்ளி அமுதத்துளி என்பன அடையாளங்களாகும்.

குறிப்பு:- சுவத்திகம் - ஓர் அடையாளம். அது நான்கு விரலும் தம்முள் ஒட்டி நிமிரப்பெருவிரல் குந்த நிறுத்தி நிற்கும் பதாகைக் கை இரண்டினையும் மணிக்கட்டில் ஏற்றிவைக்கும் ஒருவகை இணைப்புக் குறியாம். (தொடரும்)

இவ்வாரம் 30 மார்கழி — 5 தை 1953

உங்கள் பலன்?

[ஸ்ரீ இராதாகிருஷ்ணன் கணிப்பது]

மேடராசி அச்சுவினி, பரணி கார்த்திகை முதற்கால்.

நிலபுலங்களால் இலாபம் நிச்சயம். உடன் பிறந்தோர் உதவுவர். குடும்பநிலை திருந்த வேண்டும். மன நிம்மதி இருக்காது.

இடபராசி கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசீரிடம், 1, 2-ம் பாதம்,

குடும்பநிலை திருப்தியாயிருக்காது. தந்தைவழி உறவினர் சிறிது தொல்லைதருவர். சில நன்மாற்றங்கள் உண்டாம்.

மிதுனராசி மிருகசீரிடம், 2 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1ம், 3ம் பாதம்.

நிலபுலங்களால் இலாபம் நிச்சயம். நண்பர்கள் இக்கட்டுகளிலிருந்து காப்பர். வேலை வழமையிலும் அதிகமாக இருக்கும். செலவும் கூடுதலாக இருக்கும். முதல் நாள் எச்சரிக்கையோடு கழிக்கப்பட வேண்டும்.

கடகராசி புனர்பூசம் 4ம் பாதம், பூசம் ஆயிலியம்.

குடும்ப நிலைமைகள் மேலும் குழம்பலாகவே இருக்கும். கடுமையாக நீர் உழைக்க வேண்டிவரும். உமது விவகாரங்களில் சில எதிர்ப்புகள் ஏற்படும். ஆனால் அவற்றை வென்றுவிட உம்மால் முடியும். திங்கள் செவ்வாய் எச்சரிக்கையோடு கழிக்கப்பட வேண்டும்.

சிங்கராசி மகம், பூரம். உத்தரம் 1-ம் பாதம்.

செலவுகள் அதிகமாக இருக்கும். சண்டைகளைக் கட்டிக்கொள்வதில் முந்திநிற்பீர். புதன், வியாழன் எச்சரிக்கையோடு கழிக்கப்படவேண்டும். மிகுதி நாட்கள் புதிய ஈடுபாடுகளுக்கு ஏற்றவை.

கன்னிராசி உத்தரம் 2, 3, 4ம் பாதம் அத்தம் சித்திரை 1, 2ம் பாதம்.

செலவுகள் பெருகும். உமது எண்ணப்படி உமது அலுவல்களில் நடந்துகொள்வதில் இடர்ப்பாடு இருக்கக்காண்பீர். சிறு உடல்நிலைக் குழப்பங்களும் ஏற்படும். வெள்ளி சனி எச்சரிக்கையோடு கழிக்கப்பட வேண்டும்.

துலாம், சித்திரை 3 4ம் பாதம் சுவாதி விசாகம் 1, 2, 3ம் பாதம்.

பணப் புழக்கத்திற்கு நல்ல வாரம். புதுமுயற்சிகள் வெற்றிபெறும். விவசாயத்தினால் இலாபமும் உண்டாம். இனத்தவருடன் சண்டைகளுக்கு இடமுண்டு.

விருட்சிகராசி விசாகம் 4ம் பாதம் அநுஷம், கேட்டை.

பணமளவில் நல்ல வாரம். விவசாயத்தில் வெற்றி நிச்சயம், நண்பர்களும் உறவினரும் மிக உதவுவர், ஆனால் வேலை கூடுதலாக இருக்கும்.

தனுராசி மூலம், பூராடம் உத்தராடம் 1ம் பாதம்.

மனநிம்மதி இருக்காது. இனத்தவருடன் சச்சரவும் நண்பர்களுடன் தவறான விளக்கங்களும் ஏற்படலாம்.

தொடர்ச்சி 3ம் பக்கம்

கோட்டு விற்பனவு விளம்பரம்

வேலணை மேற்கு
ஏப்ரகாம்பிள்ளை கைம்பெண்
மேரிப்பிள்ளை —வழக்காளி,
இல. M.B. 4201.
எதிராக
ஊர்காவற்றுறை, சரவணை
முத்துக்குமாரு திருநாவுக்கரசு
—எதிராளி,

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M B, 4201-ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டு கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒருதுண்டுக் காணியை 1963-ம் ஹு தைமீ 15உ செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்,

தீர்வைத்தொகை:-முதல்வட்டி ரூபாய் 375-ம், 18-8-61 தொடக்கம் 7-2-62 வரைக்கும் ரூபாய் 200-க்கு 15வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 141-06 சதமும்.

ஆதன விபரம்;

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் தீவுப்பகுதி ஊர்காவற்றுறைக் கோயிற்பற்று சரவணை இறை 'நாவல் கின்ற கிவுளிப்புலமும், கிவுளிப்புலமும் மறுபிரிவுகளும்'' பர.நில இலா, 4½, இதில் வடக்குப்பக்கமாக பரப்பு நில, இலா. 4½, எல்லை கிழக்கு தளையசிங்கம் பெண் புஷ்பத்துக்குரிய ஆதனம், வடக்கு எதிரிக்குரிய ஆதனம், மேற்கு விசுவநாதன் சதிரவேலுவுக்கும், மறுபேருக்கும் உரிய ஆதனம். தெற்கு முத்துக்குமாரு பெண் லெட்சுமிப்பிள்ளைக்குரிய ஆதனம், இதடங்கலும், இவ்வாதனம் C 297/254-ம் இலக்கத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

அ. ஜெகநாதன்,
கொம்மிஷனர் &விலைமதிப்பாளர்.
16 A, அம்மன் ரோட்
கந்தர்மடம் யாழ்ப்பாணம்.
M. 221 28-12-62.

கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம்,
திருநெல்வேலி கிழக்கு
1. சுந்தரம் இராமலிங்கம்
—வழக்காளி
இல. MB 4274
எதிராக
நீர்வேலி தெற்கு
1. பெரியதம்பி கணபதிப்பிள்ளையும்
2, பெரியதம்பி கணபதிப்பிள்ளையும் —எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் MB, 4274-ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் நாலு துண்டுக்காணிகளை, 1963-ம் ஹு தைமீ 16உ புதன்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தந்தக்காணிகளுக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்,

தீர்வைத்தொகை:-முதல்வட்டி ரூபாய் 9264-ம். 25-9-61 தொடக்கம் 17-5-62 வரைக்கும் ரூபாய் 9264-க்கு 12 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 311-37 சதமும்,

ஆதன விபரம்:

1. வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் வலிகாமம் கிழக்குப்பகுதி கோப்பாய் கோயிற்பற்று நீர்வேலி இறை ''தொலையாவத்தை'' பர, நில. இலா, 76-ம் கிணறுகளும். எல்லை கிழக்கு கார்த்திகேசன் பெண் சின்னாச்சிப்பிள்ளைக்கும், கேணியும், சின்னப்பா தம்பையாவுக்குரிய ஆதனமும், வடக்கு குமாரசாமி நடராசாவுக்கும், பங்காளருக்கும் உரிய ஆதனம். மேற்கு கீழே சொல்லப்படுகிற இரண்டாம் ஆதனம். தெற்கு கீழே சொல்லப்படுகிற மூன்றும் ஆதனமும், மறுபேருக்குரிய ஆதனங்களும். இதில் ரோட்டுக்காக விடப்பட்ட நிலம் பிறநீக்கலாக இதில் சொரியலாய் ¼ பங்கும் அதற்குரியவைகளும். இவ்வாதனம் K 173/182ம் இலக்கத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

2. மேற்படி இறை ''தொலையாவத்தை தோட்டம்'' பர. நில. இலா 12-ம் கிணறும். எல்லை கிழக்கு மேலே சொல்லப்பட்ட முதலாம் ஆதனம், வடக்கு மயில்வாகனம் சரவணமுத்துவின் ஆதனம். மேற்கு சுப்பிரமணியம் பெண் ஆச்சிப்பிள்ளைக்கும், பங்காளருக்கும் உரிய ஆதனம். தெற்கு குமாரசாமி நடராசாவுக்கும் பங்காளருக்கும் உரிய ஆதனம் இதில் சொரியலாய் ¼ பங்கும் அதற்குரியவைகளும். இவ்வாதனம் K 173/183-ம் இலக்கத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

3. மேற்படி இறை ''தொலையாவத்தை'' பர. நில. இலா. 26½ யும் கிணறும் செய்பயிர்களும். எல்லை கிழக்கு கார்த்திகேசு பெண் சின்னப்பிள்ளையின் ஆதனம். வடக்கு மேற்சொல்லிய முதலாம் ஆதனம். மேற்கு சின்னத்தம்பி தில்லையம்பலத்தின் உரிமைக்காறருக்குரிய ஆதனம். தெற்கு நாகமணி பூதத்தம்பிக்கும் பங்காளருக்கும் உரிய ஆதனம். இதில் சொரியலாய் 16 பரப்பும் அதற்குரியவைகளும், இவ்வாதனம் K 140/146-ம் இலக்கத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

4. வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் வலிகாமம் கிழக்குப் பகுதி புத்தூர் கோயிற்பற்று சிறுப்பிட்டி இறை ''குன்றம்பிசீமா, குடும்பியன் சீமா, பெற்றப்சீமா, பத்தினிச்சீமா, மயிலிசீமா சுலலய்பிடியும்'' மறுபிரிவுகளும். பர. நில. இலா 47-ம் குளி 8-ம் செய்பயிர் வான்பயிர்களும், பனைகளும், கிணறுகளும். எல்லை கிழக்கு குமாரசாமி பெண் வள்ளிப்பிள்ளைக்கும், கந்தையா அருணாசலத்துக்கும், இளையதம்பி பொன்னையாவின் உரிமைக்காறருக்கும், பங்காளருக்கும், மறுபேருக்கும், ஒழுங்கையும். மேற்கு மழவராயர் கந்தையாவின் உரிமைக்காறருக்கும் மறுபேருக்கும். ஒழுங்கையும். தெற்கு பொன்னையா கைம்பெண் தெய்வானைப்பிள்ளைக்கும், ஒழுங்கையும், கந்தையா அருணாசலத்தின் ஆதனமும். இதடங்கலும். இவ்வாதனம் K 175/175-ம் இலக்கத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

அ. ஜெகநாதன்,
கொமிஷனரும்விலைமதிப்பாளரும்
16 A அம்மன் ரோட்
கந்தர்மடம், யாழ்ப்பாணம்
M, 223, 28-12-62,

1962 — 1964ம் ஆ - க்குரிய
கல்விப் பொதுத் தராதர (சாதாரண)ப் பரீட்சை (G.C.E.)
★
தமிழிலக்கியம்
1. கம்பராமாயணம்-சுந்தரகாண்டம்
காட்சிப் படலமும், நிந்தனைப் படலமும்
2. ஸ்ரீ சி. சுப்பிரமணிய பாரதியார் பாடல்கள் (தொகுப்பு)
பண்டிதமணி வித்துவான் திரு. ந. சுப்பையபிள்ளை
அவர்கள் இயற்றிய விரிவுரையுடன்
(456 பக்கங் கொண்டது)
யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபையாரின் வெளியீடு
யாழ்ப்பாணம் சைவப்பிரகாச யந்திரசாலையிலும் மற்றும் பிரபல புத்தக வியாபாரிகளிடமும் பெறலாம். (விலை 3-50)

கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் நல்லூர்
1 குமாரவேலு தம்பிராசாவும்
பெண் 2. பராசக்தியும்.
- வழக்காளிகள்.
இல. M B 3926
எதிராக
யாழ்ப்பாணம் நல்லூர்
ஆடியபாத ரோட்
1. மார்க்கண்டு பாலசிங்கமும்
பெண் 2, தில்லையம்மாவும்.
யாழ்ப்பாணம் ராணிவீதி
3. சின்னக்குட்டி ஐயம்பிள்ளை
முதலியும் பெண்
4. பார்பதியும்
யாழ்ப்பணம் ஆடியபாதரோட்
5. சுப்பிரமணியம் இராசையா
யாழ்ப்பாணம் திருநெல்வேலி
கிழக்கு கொண்டலடி ரோட்
6. முத்தையா சிவசுந்தரம்
- எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M. B 3926ம் இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஆறு துண்டுக்காணிகளை 1963-ம் ஹு தை மீ 18உ வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:- முதல் வட்டி ரூபா 8165-ம் 28-2-61 தொடக்கம் 23-10-61 வரைக்கும் ரூபா 5000 க்கு 12 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 3 2-71 சதமும். கோட்டுச்செலவில் ரூபா 175 கொடுபட்டிருக்கிறது.

ஆதன விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி நல்லூர் கோயிற்பற்று நல்லூர் இறை ''கவுன்சியதோப்பு'' பர நில இலா 15ம் குளி 1, 1/8ம் கல்வீடும். பயிர்வகைகளும் எல்லை கிழக்கு ஒழுங்கை வடக்கு கீழே சொல்லப்படுகிற இரண்டாவது ஆதனம். மேற்கு ஆறுமுகம் பெண் பெரியபிள்ளையின் ஆதனம், தெற்கு சுப்பர் நாகலிங்கத்துக்கும், மறுபேருக்கும், ரோட்டும். மேற்கெல்லையில் இருக்கும் வழிப்பாதை பிறநீங்கலாக, இதில் சொரியலாக 1/5 பங்கும். வடக்கெல்லையில் இருக்கும்கிணற்றில் பங்கும். வழிவாய்க்கால் பாவிப்புரித்தும். இவ்வாதனம் D 234 / 279ம் இலக்கத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

2. மேற்படி இறை ''களன்சியதொப்பு'' பர.நில இலா 11-ம் குளி 5, 41/48ம் கிணறும் பயிர்வகைகளும். எல்லை கிழக்குஒழுங்கை. வடக்கு வல்லிபுரம் செல்லப்பாவுக்கும் சகோதரங்களும் உரிய ஆதனம். மேற்கு ஆறுமுகம் பெண் பெரியபிள்ளையின் ஆதனம். தெற்கு மேற் சொல்லிய முதலாம்ஆதனம். இக்காணியில் இருக்கும் கிணற்றில்பங்கும். வழி வாய்க்கால்பங்கும், பிறநீக்கலாக. இக்காணியின் மேற்குப் பக்கத்தில் இருக்கும் வழி பாவிப்புரித்தும். அதற்குரியவைகளும் சேர்ந்து இவ்வாதனம் D240/142ம் இலக்கத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

3. மேற்படி இறை ''ஆர்டானிய வளவு'' பர, நில இலா (5) ஐந்து எல்லைகிழக்கு கந்தன் மருதனின் ஆதனம். வடக்கு பாலசிங்கம் பெண் தில்லையம்மாவிற்கும் பங்காளருக்கும் உரிய ஆதனமும். மேற்கும் தெற்கும்ரோட்டு. இதடங்கலில் சொரியலாய் 1/5 பங்கு. இவ்வாதனம் D240/143 ம் இலக்கத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

4. மேற்படி இறை ''தோப்புவளவு'' பர நில இலா. 4½ம் வீடும் கிணறும் பயிர்வகைகளும் எல்லை கிழக்கு கந்தையா பெண் பாக்கியத்துக்குரிய ஆதனம். வடக்கு வயிரமுத்து வல்லிபுரத்தின் உரிமைக்காரருக்குரிய ஆதனம். மேற்கு சின்னத்தம்பி தம்பிப்பிள்ளைக்கும் பெண் சிவக்கொழுந்துவுக்கும் உரிய ஆதனம். தெற்கு ரோட்டு. இதில் சொரியலாய் 1/5 பங்கும். அதைச்சேர்ந்தவைகளும். இவ்வாதனம் D 140/120ம் இலக்கத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

(5) வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதிசுண்டிக்குளி கோயிற்பற்று கொழும்புத்துறை இறை ''சிவியவளம்'' பர. நில. இலா 10ம், வீட்டிலும் கொட்டில்களிலும் ⅓ பங்கும். கிணறும் பயிர்வகைகளும், எல்லை கிழக்கும் வடக்கும் ஒழுங்கை. மேற்கு சங்கரப்பிள்ளை சுந்தரத்தின் ஆதனமும் ஒழுங்கையும். தெற்கு மனவல் சூசையின் உரிமைக்காறரின் ஆதனம், இதில் சொரியலாய்இவ்வெல்லைக்குள் சொல்லப்பட்டதில் ½ அரைவாசியும். பிரயோசனங்களில்1/5 பங்கும், இவ்வாதனம் D234/280ம் இலக்கத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

(6) வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் வலிகாமம் கிழக்குப் பகுதி கோப்பாய் கோவிற்பற்று கோப்பாய் தெற்குஇறை 'ஒடைவயல்'' பர நெல் இலா 61, எல்லை கிழக்கு ரோட்டும். முருகேசு பெண் இரத்தினத்தின் ஆதனமும். வடக்குமண்ரோட்டு. மேற்கு குமாரசாமி சண்முகநாதனின் ஆதனம். தெற்கு இராசையா பெண் கற்பகத்திற்கும்மறுபேருக்கும் உரிய ஆதனம். இதில் சொரியலாய் 1/5 பங்கும். அதற்குரியவைகளும். இவ்வாதனம் K 186/197ம் இலக்கத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

அ. ஜெகநாதன்
கொமிசனரும் விலைமதிப்பாளரும்.
16 A அம்மன்ரோட்.
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
M. 225 28-12-62.

உ
சிவமயம்

திருவெம்பாவைப் பூசை

திருவருளை முன்னிட்டு யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாதரவில் சபை நாவலர் மண்டபத்தில் சுபகிருது ௵ மார்கழி ௴ ௧௬ உ (31-12-62) திங்கட்கிழமை தொடக்கம் 10 நாட்களுக்கு திருவெம்பாவைப் பூசையும் திருவாதவூரடிகள் புராண படனமும் தினமும் காலை 8 மணிக்கு ஆரம்பித்து நடைபெறும்.

சைவபரிபாலன சபை,
யாழ்ப்பாணம், 27-12-62.

மு. மயில்வாகனம்,
சமயப்பிரசார அமைச்சர்

மரத்தின் வேரனையர் மங்கையர்

—:0:—

[அகில இலங்கைச் சைவமகாநாட்டின் மூன்றும் நாளில் “சைவம் காத்த செல்வியர்” என்னும் பொருள்பற்றி ஸ்ரீமதி கு. காமாட்சியம்மையார் M.A. தமிழ் விரிவுரையாளர், அரசினர் கல்லூரி சேலம் அவர்கள் ஆற்றிய விரிவுரையின் சாரம்.]

(இந்துசாதன அபிமான நிருபர் அன்பர்
பிரம்மஸ்ரீ. வ. குகசர்மா அவர்கள் தொகுத்துதவியது.)

சைவத்திலே மூன்றுக்கு அதிகம் மதிப்பு உண்டு முப்பொருள், மும்மதம் இவ்வாறே பல இருக்கின்றன அவ்வாறே சைவம் காத்த செல்வியரும் மூவகைப்படுவர் பொதுவாகக்கூறினல் வீடுதோறும் நின்று மறைமுகமாகத் தொண்டு செய்பவர்கள் பெண்கள். ஒரு மரம்மேலே படர்ந்து மலர் காய் கனி முதலியவற்றைத் தருகிறது. ஆனல் வேர்ப்பகுதி அந்த மரம் வளர்ந்து பிரயோசனம் கொடுப்பதற்கு உதவுகிறது. ஆனல் அப்பகுதி பூமியின் கீழ் மறைந் திருக்கிறது. வேரைப் போன்றவர்கள் பெண்கள். இதனைக் கருதியே, “மரத்தின் வேரனையர் மங்கையர்” என்று கூறினர் சேக்கிழார். இவ்வாறு பெருமை பெற்ற செல்வியரின் மூன்று பகுதிகளைப் பார்ப்போம். முதலாவது வாழ்க்கை வரலாறு காட்டிப் பேசக்கூடிய தலைசிறந்தவர்கள் திலகவதியார், மங்கையர்க்கரசியார், காரைக்காலம்மையார் ஆகியோர்.

இரண்டாவது கணவனுக்குத்துணையாக அவர் நோக்கம் நிறைவேற உதவியோர், இயற்பகைநாயனர் மனைவி, அப்பூதியடிகள் மனைவி, இளையான்குடிமாற நாயனர் மனைவி ஆகியோர்.

மூன்ருவதாக மற்றைய நாயன்மார்களும், மனைவிகளுர். இந்த மூவகையினருள் முதல்வகையினரை மீண்டும் மூவகையாகப் பிரிக்கலாம், வீட்டுப்பணி செய்தவர், நாட்டுப்பணி செய்தவர், உலகப்பணி செய்தவர் என்பன அப்பிரிவுகளாம். குடும்பப்பணி செய்தவர் திலகவதியார். அவருக்கு நியமிக்கப்பட்டிருந்த கணவன் யுத்தகளத்திலே உயிர்கொடுத்துப் புகழ்கொண்டார். கணவனை, இழப்பது மிகவும் கொடுமை என்று பெண்கள் கருதினர்கள். “கணவனை இழந்தவர்க்குக் காட்டுதல் இல்லை” கோப்பெருதேவி கூறியதாகச் சிலப்பதிகாரம் எடுத்துக்காட்டுகிறது. ஆனல் வேறு சில கடமைகளுக்காக உயிர் வாழ்வதில் தவறில்லை.

சைவசமயத்திலே பெண்களுக்குத் துறவென்ற நிலையில்லை. ஆனல் திலகவதியார் தம்பியாருக்காகத் தவம் புரிந்தார். அந்நிலை ஒரு சிறப்பான நிலை. அதனைச் சேக்கிழார்,

“அம்பொன் நூல்தாங்கா
அனைத்துயிர்க்குமருள் [தாங்கி
இம்பர்மனைத் தவம்புரிந்து
திலகவதியாயிருந்தார்”

என்று எடுத்துக்கூறுகிறர். இவருடைய இத்தவத்தாலேயே நாவுக்கரசரை தமிழ் உலகம் பெறக்கூடியதாயும் நாவுக்கரசர் நன்னெறிக்கண் செல்லவும் ஏது உண்டாயிற்று.

நாட்டுக்கே நற்பணி செய்தவர் மங்கையர்க்கரசியார். பாண்டியன் வேறு சமயத்தில் புகுந்திருந்தாலும் தன் மனைவிக்கு வழிபாட்டுச் சுதந்திரம் அளித்துள்ளான் என்பது தெரிகிறது. சமணர் மடத்திற் கொழுவிய தீயை மங்கையர்க்கரசியாருக்காகவே ‘பையவே” சென்று பாண்டியர்க்காகவே என்று பணித்தார்ஞானசம்பந்தர். அதன் மூலம் வெப்பு நோயுண்டாகி பாண்டியன் ஞானசம்பந்தர் அருளால் நீங்கப்பெற்றுச் சைவ சமயத்தன் ஆனன். பாண்டிய நாட்டு மக்களும் சைவ நன்னெறியில் ஒழுகினர்கள். இவ்வாறு நாட்டுப் பணி செய்தார் மங்கையர்க்கரசியார்.

காரைக்காலம்மையாரின் பாடல்கள் பதினொராந் திருமுறையாகத் திகழ்கின்றன. கடவுளிடம் ஏன் எனது இடரை இன்னும் தீர்க்கவில்லை என்று வினவுகிறர்.

“மைஞ்ஞான்ற கண்டத்து
வானேர் பெருமானே
எஞ்ஞான்று தீர்ப்பதிடர்”.

ஆனல் உடனே அடுத்த பாட்டிலே அந்தக் கேள்வியை மாற்றி

“இடர்களை யாரேனும்
எமக்கிரங்கா ரேனும்
படருநெறி பணியா ரேனும்
— சுடருருவில்
என்பறுக் கோலந்
தெரியாடும் எம்மானுர்க்கு
அன்பறு தென்னெஞ்
சவர்க்கு”

என்று கூறுகிறர்,

அவர் உலகத்திற்கே தொண்டு செய்தார் என்பதை பின்வரும் பாவடிகளால் கண்டுகொள்ளலாம்.

“அருளே யுலகெலாம்
ஆள்விப்பதீசன்
அருளே பிறப்பறுப்ப
தானல்—அருளாலே
மெய்ப்பொருளை நோக்கும்
விதியுடையேன் எஞ்
[ஞான்றும்
எப்பொருளு மாவ
தெனக்கு”

தீய செயலையே வெறுப்போம்

—O—

வளர்ந்தவர் வளர்த்த தாயின் பாலைக் குடித்துச் சீவிக்கலாமா? குழந்தை தாய்ப்பாலையே கட்டாயம் குடித்து வாழவேண்டும். ஆகவே குழந்தைக்குச் சரியெனக் கொள்ளக்கூடியதொரு நீதி வளர்ந்தார்க்குப் பொருந்தாதேயாம். வளர்ந்தோர் செய்வது தவறு என உலகம் கருதும் ஒரு செயலைச் சிறு குழந்தைகள் செய்வது சரியென ஒப்புகின்றது. குழந்தையின் செயல் எமக்குப் பிழையாயினும் யாம் அக் குழந்தையை வெறுப்பதில்லை. யாம் அச்செயலைச் செய்யின், செயலை வெறுப்போமன்றி எம்மை வெறுப்பதில்லை. அதனைப் போல எங்கள் நண்பர்கள் செய்யும் தவறுகளை வெறுப்பதன்றி அவர்களை யாம் என்றும் வெறுக்கக் கூடாது. அத்தவறுகளை யாம் செய்யக்கூடாது. உலகம் முழுவதும் கடவுள் மயமே; அவனன்றி ஓரணுவும் அசையாதன்றே?

— சுவாமி ராமதீர்த்தர்,

மனிதனை வழிப்படுத்தத் தாம் சிவவாழ்வு...

[2-ம் பக்கத் தொடர்ச்சி]

வாழ்ந்து காட்டினர். அவருடைய திருவேடத்தை “இடையறாப் பேரன்பும் இனைவிழியும் உழவாரத்தின் படையறாத் திருக்கரமும்” என்று பாடுகிறர் காஞ்சிபுராண ஆசிரியர்.

மனிதனுக்கு ஏன் கஷ்டம் உண்டாகிறது? தாம மற்றவர்களிலும் பார்க்க மேலாக வாழவேண்டுமென்று நினைக்கின்ருன். கூடிய சுக போகங்களை அடைய வேண்டுமென்று நினைக்கிருன். அப்படிப்பட்ட மனிதனைப் பார்த்து அப்பர் சொல்லுகிறர் புழுவைப்பார். அதற்கும் மானிடராகிய எங்களுக்கும் பொதுவாக நான்கு குணங்கள் இருக்கின்றன. உண்ணுதல், அசைதல், வர்க்க விருத்தி, வளர்தல் ஆகிய நான்கும் பொதுத்தன்மைகள். அந்தப் புழுநிலத்தைப் பண்படுத்தி பயிர் விளைதற்கு உதவி செய்ய வேண்டுமென ஆண்டவனல் அனுப்பப்பெற்றது. அவைகள் தங்கள் கடமைகளை எவ்வளவு அமைதியாகச் செய்கின்றன. தம்மைக் காட்டிக்கொள்ளாமல் மறைந்திருந்து செய்கின்றன. மனிதரைப்போல அவை பெருமைகொள்வதில்லை.

“புழுவுக்கும்குணம் நான்கெனக்கும்மதே புழுவுக்கெனக்குள பொல்லாங்கில்லை என்பது சம்பந்தர் தேவாரம். தனக்குப் பிறவி வேண்டாம் என்று நினைத்த அப்பர் அவ்வாறு தனக்கும் பிறவி வந்தாலும் இந்தத் தன்னலமற்ற புழுவாய்ப் பிறப்பது நல்லது எனக் கருதியிருத்தல் கூடும். எனவேதான் “புழுவாய்ப் பிறக்கினும் உன்னடியென்மனத்தே வழுவாதிருக்க வரந்தர வேண்டும்” என்று வேண்டுகிறர். சிந்தையைச் சிவனுக்காக்கும் உறுதி இங்கே தெரிகிறது. “அப்பன் நீ அம்மை நீ ஐயனும் நீ அன்புடைய மாமனும் மாமியும் நீ” என்று வரும் திருத்தாண்டகம் மிகவும் சிறப்புடையது. மகனிலும் காட்டி மகளை முடித்த மருமகனை நன்கு போற்றும் உலக வழக்கம குறித்துப்போலும் ‘அப்பன்” “அம்மை” முதலிய வற்றிற்குக் கொடாத அன்புடைய என்னும் அடையை மாமனுக்கும் மாமிக்கும் கொடுத்தார். “அம்மையே அப்பா” என்று மணிவாசகர் அம்மையை முதலில் வைத்துப் பாட நாவுக்கரசர் ஏன் “அப்பன் நீ” என்று முதலில் வைத்தார் என்று ஒரு கேள்வியெழுகின்றது சர்வ சங்கார காலத்திலே இறைவியும் இறைவனுடன் ஒடுங்கி, இறைவனே தனித்து நிற்பன் ஆகையால் இறைவனுகிய அப்பனை முதலில் வைத்தார்.

சுவை மிகுந்த அப்பரின் வாக்குகளை நாம் ஊன்றிப் படிக்கவேண்டும்.

—— —

அணிந்துரை அரங்கம்

கந்தப்பெருமான் வேல்வெண்பா
(இலவச வெளியீடு)
ஆக்கியோன்:
அல்வாயூர் மு. செல்லையா

காப்புச் செய்யுளுடன் சேர்த்து மொத்தமாக 19 வெண்பாக்களிலடங்கிய வேல் வெண்பா என்னும் இப்பிரசுரம் கதிர்காமக் கந்தப்பெருமான் பேரில் அழகாக இயறறப்பட்டுள்ளது. “வண்டுவிடு தூது” என்னும் தூதுப் பிரபந்தத்தை இயற்றி நூலுருவில் வெளியிட்டவரும் இப்பிரசுரத்தின் ஆசிரியருமான கவிஞர் அல்வாயூர் மு செல்லையா அவர்கள் தமது விலாசத்திற்கு 10 சத முத்திரையுடன் அன்பர்கள் எழுதினல் பிரதிகள் இலவசமாக அனுப்பி வைக்கப்படும்என்று அறிவித்துள்ளார்.

—·—

கோட்டு விற்பனவு விளம்பரம்

—·—

யாழ்ப்பாணம்
டிஸ்திறிக் கோட்டில்

1 ஊர்காவற்றுறைமேற்கு ஊர்காவற்றுறை சூசைப்பிள்ளை பிலிப்பையா
2 ஷியூர் யோசைமேரி செபஸ்தியாழு

—வழக்காளிகள்

இல M B 3958

எதிராக

கரம்பன் கிழக்கு ஊர்காவற்றுறை சுந்தரம்பிள்ளை கனகசபை

எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M. B. 3958-ம் இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணி 1963-ம் ௵ தைமாசம் 19-ந் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 4025-ம் ரூபா 3000-க்கு 15-3-61 தொடக்கம் 19-2-62 வரை 12 வீதமான வட்டியும் அதன்மேல் முழுத் தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீதமான வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 229-02 சதம்.

காணி விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப்பகுதி ஊர்காவற்றுறைக் கோவிற்பற்று கரம்பனிறை “பாலைக்காடு குளத்து தெற்குப் பாலைக்காடு” பர. கெ. இலா. பதின்மூன்று குளி பத்தகடன் எட்டிலொன்று. (பர. கி. இலா, 13 குளி 10 1/8) வீடும், குசினியும் செய்பயிர் வான்பயிர்களும் எல்லை கிழக்கும் வடக்கும் பிலிப்பிள்ளை சூசைப்பிள்ளைக்கு உரியவாதனம். மேற்கு சவரிமுத்து வஸ்தியாம்பிள்ளைக்குரிய வாதனமும் றேட்டும் தெற்கு முருகேசுபெண் அன்னத்திற்கும் சுப்பிரமணியம் சுந்தரம்பிள்ளைக்கும் உரிய ஆதனங்கள். இதன் பதிவு யாழ்ப்பாணம் C294/172.

1962-ம் ௵ கார்த்திகை ௴ 23உ
யாழ்ப்பாணம்

வை. ஏரம்பமூர்த்தி,
கொம்மிஷனர்.

M 224. 28-12-62.

கிளியும் பூவையும்

இன்றைய உலகில் பொழுது போக்கிற்கும் கேளிக்கைக்கும் கலை வளர்ச்சிக்குமாக ஏற்படுத்தப்பட்டுநடைபெற்று வரும் பலவித கலைப் போட்டிகளைப் போலப் பண்டைத் தமிழ் மக்களிடையேயும் பல சுவையானபோட்டிகள் நடாத்தப்பெற்றுவந்துள்ளன.

அவற்றுள் மற்போர், ஆண்மை பொலிந்து மிடுக்குப் பெற்று நிற்கும் காளையுடன் வீர இளைஞன் ஒருவன் நேர் நின்று போர் புரிதல், குதிரையேற்றப்போட்டி தேரேற்றப் போட்டி பெண்களிடையே யாழ் மீட்டல் பாட்டிசைத்தல் கூத்து, பெண் யானையைப்போன்று அசைந்தாடல், அதனை விரைவாகச் செலுத்துதல், சதுரங்கம் ஆடல் என்னும் ஒருவகை விளையாட்டுப்போன்றவற்றில் போட்டிகள் முதலியவை நிகழ்ந்துவந்துள்ளன. அவையன்றி கோழிப்போர் ஆட்டுக்கடாப் போர், சிவல் குறும்பூழ் என்னும் பறவைகளின் போர் ஆகியவைகளிலும், பேசக் கற்றுக் கொடுக்கப்பட்ட கிளிகளுடன் அவ்விதமே மொழி பயின்ற, பூவையெனப்படும் புறுக்களையும் ஒன்றற்கொன்று எதிராகப் பேசவிட்டு வெற்றி தோல்வி காணுவதிலும் போட்டிகளும் நடைபெற்று வந்துள்ளன என்பது பழந்தமிழ் புறப் பொருள் நூல்களில் அறியக்கிடக்கின்றன. —

கோட்டு விற்பனவு விளம்பரம்

சிறுப்பிட்டி
1, காசிநாதர் தப்பையாவும்
2, தம்பையா காசிநாதரும்.
—வழக்காளிகள்.

இல. 3982.

எதிராக

ஆவரங்கால்
பொன்னம்பலம் கைம்பெண்
சந்திரவதனியம்மாள்,
—எதிராளி.

யாழ்ப்பாணம் டிஸ்திரிக்கோட்டின் M.B. 3982-ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் மூன்று துண்டுக்காணிகளை, 1963-ம் ௵ தை ௴ 18உ வெள்ளிக்கிழமை பிற்பகல் 4மணி தொடக்கம் அந்தந்தக்காணிகளுக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:- முதல்வட்டி ரூபாய் 2622-50 ம். 10-4-61 தொடக்கம் 21-9-61 வரைக்கும் ரூபாய் 2000-க்கு 9 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபாய் கொடுபட்டிருக்கிறது.

ஆதன விபரம்:

1. வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திரிக் வலிகாமம் கிழக்குப் பகுதி புத்தூர் கோயிற்பற்று ஆவரங்கால் இறை "ஐம்புலன் கலட்டி" பர. நில. இலா. 4-ம் குளி 10¾, எல்லை கிழக்கு தர்மலிங்கம் பெண் தர்மலட்சுமிக்கும் பங்காளருக்கும் உரிய ஆதனம். வடக்கு நாகநாதன் பெண் கதிராசிப்பிள்ளையின் உரிமைக்காரருக்கும் மறுபேருக்கும் உரிய ஆதனம். மேற்கு தவளிமுத்து சபாபதி பெண் சரஸ்வதிப்பிள்ளையின் ஆதனம். தெற்கு ஒழுங்கை. இதடங்கலும் இதற்குரியவைகளும். இவ்வாதனம் K 203/125-ம் இலக்கத்தில் பதியப்பட்டுள்ளது.

2. மேற்படி இறை "கோவளை" பர. நில, இலா. (2) இரண்டு. எல்லை கிழக்கும் வடக்கும் சுப்பிரமணியம் மயில்வாகனத்தின் உரிமைக்காரருக்குரிய ஆதனம். மேற்கும் தெற்கும் ஆவரங்கால் நடராச இராமலிங்கசுவாமி கோயிலுக்குரிய ஆதனம். இவ்வாதனம் K 203/126-ம் இலக்கத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

3. மேற்படி இறை "சிளும்பிள்ளையும் ஊறர் சிளு'ப்பிள்ளையும்" பர. நில. இலா. (10) பத்து. எல்லை கிழக்கு எதிரியின் ஆதனம். வடக்கு தண்ணீர் வாய்க்கால். மேற்கு கட்டைவேலிக்கும், சின்னப்பொடியனுக்கும் பங்காளருக்கும் உரிய ஆதனம், தெற்கு வயிரவன் கதிரனுக்கும் பங்காளருக்கும் உரிய ஆதனம். இதடங்கலும். இவ்வாதனம் K 213/152-ம் இலக்கத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது,

அ. ஜெகநாதன்,
கொமிஷனர் & விலைமதிப்பாளர்

16 A. அம்மன் ரோட்
கந்தர்மடம் யாழ்ப்பாணம்,
M 224 28-12-62.

கலாச்சாரத் தொடர்பையுமா கத்தரிக்க வேண்டும்?

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மாகிய கோவதையும் கோமாமிசவுணவும் நாட்டில் பெருகி வருகின்றன. ஞானப்பிரகாச முனிவர் ஸ்ரீலஸ்ரீ. ஆறுமுகநாவலர் அவதாரம் செய்த இந்நாட்டில் வசிக்கும் மக்கள் பசுக்கொலையைத்தவிர்க்கவேண்டும் என்ற விரதத்தைக் கைக்கொள்ள வேண்டும் என்ற விண்ணப்பத்தைச் சைவமக்களுக்கு இம்மகாநாடு சமர்ப்பிக்கின்றது.

5; இந்தியாவிலுள்ள ஆலயங்களுக்குக் காணிக்கையனுப்பும் தடையை அரசாங்கம் நீக்கவேண்டும்.

6. ஈழநாட்டு மக்கள் இந்தியாவுக்கு ஏழு வருடத்துக்கு ஒருமுறைதான் பிரயாணஞ் செய்யலாம் என்ற தடையை நீக்கவேண்டும்.

—:—

இறைவனைநோக்கி... எம்மை நோக்கி......

1-ம் பக்கத் தொடர்ச்சி

முடியாது. பாலும்நீரும்கலந்தபின் பிரியாது. பாலைச் சூடு காட்டினால் நீர் பிரியப் பொறுக்காத பால் பொங்குகின்றது. திருவாசகத்தில் ஒரு மொழியே விம்மியழும் நிலையைஉண்டாக்கும். சாதாரண கண்ணீர் துளியே மிகவும் பலமுடையது. "ஒரு கண்ணீர்த் துளி உலகையே மாற்றிவிடுகிறது" என்பது ஷேக்ஸ்பியர் வாக்கு. ஆயிரம் பேர் உள்ள பெரும் சபையிலே கடவுளை நினைத்து வெட்கத்தை விட்டு ஒரு சொட்டுக் கண்ணீர் விடு, கடவுளைக் கரணலாம். என்பது பெரியோர் கொள்கை. இறைவனை நோக்கி நாம் ஒரு அடி முன் வைத்தால் ஆண்டவன் நம்மை நோக்கி ஆயிரம் அடி முன் வைக்கிறான்.

திருச்சதகம் நூறு பாடல்களிலே அழுது அடி அடைந்த அன்பர் தம்மைப்பற்றிக் கூறுகிறார். மெய் புளகாங்கிதம் கொள்ளவேண்டும். கைகளைத் தலையிலே கூப்பிக் கொள்ளவேண்டும். கைகளைக் கீழேவிட்டால் உலகப் பற்றைப் பிடித்துக்கொள்வதாக அர்த்தம். கைகளை சிரசின் மேற் குவித்தால் பூமியின் பற்றை விட்டு இறைபாதங்களைப் பற்றிக் கொள்வது என்பது கொள்கை. துச்சாதனன் துகில் உரியும்போது திரௌபதி "இருகைநறுமலர் குவிய வேறொன்றும் கூறாமல் கோவிந்தா கோவிந்தா' என்று வணங்கினாள். உடனே மகாவிஷ்ணு உதவி செய்தார் என்பதைப் பார்க்கிறோம். மோட்சம்நரகம் என இரண்டு மார்க்கம் உண்டு. சாதாரணமாய் மோட்சத்தைஇலேசாக அடைய வேண்டுமென்பது மனிதனதுஆசை. அந்தவழி இறைவனை நினைத்தழுவது. அழ இரு கண்கள் காணாது. "உடம்பெல்லாம் கண்ணாய் அண்ணா வெள்ளம்தான் பாயாதால்" என்பது அடிகள் கருத்து.

ஆகையால் இறைவனை உணர்ந்துணர்ந்து அன்பே நிறைந்து கண்ணீர் ஊற்றுப் போற்பெருக விம்மியழவேண்டும். குழந்தையொன்று தமது அன்புத் தந்தைதம்மை யடித்துவிட்டால் எவ்வாறு விம்மிவிம்மி யழுமோ அவ்வாறு அழவேண்டும் இவ்வாறெல்லாம் நமக்கு வழி காட்டிய அழுதடி அடைந்த அன்பர் திறனை வாழ்நாளெல்லாம் நினைத்துக் கலந்து பாடி அதன்மூலம் இன்பம் பெறுவோம்.

தொகுத்து உதவியவர்
ஸ்ரீ வ ஞுகசர்மா

முள்ளியவளை நிருபர்

ஸ்ரீ. சங்கர சுப்பிரமணியசர்மா அவர்கள் 'இந்துசாதனம்' முள்ளியவளை நிருபராகவும், விற்பனையாளராகவும் நியமிக்கப்பட்டுள்ளார்,

---

கோட்டு விற்பனவு விளம்பரம்

கோப்பாய் கூட்டுறவு கமத்தொழில் உற்பத்தி விற்பனவுச் சங்கம், தற்பொழுது கோப்பாய் வடக்கு பலநோககுக கூட்டுறவுச் சங்கம் (மட்டுப்படுத்தப்பட்டது)

—வழக்காளி.

இல. M B: 4423.

எதிராக

கோப்பாய் தெற்கு, பழம் ரோட்
1. முருகேசு பொன்னம்பலமும்
2. பொன்னம்பலம் பெரிய தம்பியும் —எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திரிக்கோட்டின் M.B 4423-ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் இருதுண்டுக்காணிகளை, 1963-ம் ௵ தை ௴ 15உ செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் அந்தந்தக்காணிகளுக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்,

தீர்வைத்தொகை:-முதல்வட்டி ரூபாய் 1662-ம். 30 - 11 - 61 தொடக்கம் 23-3-62 வரைக்கும் ரூபாய் 2000-க்கு 4 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபாய் 211-60 சதமும்.

ஆதன விபரம்;

1. வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திரிக் வலிகாமம் இழக்குப் பகுதி கோப்பாய் கோயிற்பற்று கோப்பாய் தெற்கு இறை "கந்தன் காடு" பர நெல். இலா, 18 1/5-ம், எல்லை கிழக்கு சின்னத்தம்பி இளையப்புவுக்கும் மறுபேருக்கும் உரிய ஆதனம். வடககு சின்னத்தம்பி பரஞ்சோதிக்குரிய ஆதனம். மேற்கு S சின்னப்புவுக்கும், மறுபேருக்கும் உரிய ஆதனம். தெற்கு சின்னட்டி பெண் முத்தாச்சிக்கும், பங்காளருக்கும் உரிய ஆதனம்.

2. மேற்படி இறை "குரும்பசிட்டிபுலம்" பர.நெல.இலா. 31-ம் வடக்கெல்லையில் இருக்கும் கிணற்றில் பங்கும், வழி வாய்க்கால் பாவிப்புரித்தும், ஆடுகால், துலா பாவிப்புரித்தும். எல்லை கிழக்கு இருபாலை சிவன்கோவிலுக்குரிய ஆதனம். வடக்கு மருதர் பெண் சிவகாமிப்பிள்ளைக்குரிய ஆதனம். மேற்கும், தெற்கும் பொன்னம்பலம் இராமநாதனின் உரிமைக்காரருக்குரிய ஆதனம். இவ்வாதனம் K 190/100-ம் இலக்கத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

அ. ஜெகநாதன்
கொமிஷனரும் விலைமதிப்பாளரும்

16A, அம்மன் ரோட்
கந்தர்மடம், யாழ்ப்பாணம்,
M. 222 28-12-62

இந்துசாதனம்

திருத்திய வருடசந்தாவிகிதம்

உள்நாடு	
ஆங்கிலம்	9-00
தமிழ்	9-00
ஆங்கிலம் - தமிழ்	12-00
வெளிநாடு	
ஆங்கிலம்	10-50
தமிழ்	10-50
ஆங்கிலம் - தமிழ்	15-50
கல்வி நிலையங்களுக்கு	4-50

கோட்டு விற்பனவு விளம்பரம்

சாவகச்சேரி டிஸ்திரிக் கோட்டில்

தத்துவ வழக்கு இல 79

காலஞ்சென்ற மீசாலை அருணர் வயிரமுத்து கைம்பெண் செல்லாச்சியின் ஆஸ்திகளின்விசயமாக காலஞ் சென்றவர்
1. மீசாலை தெற்கு கணபதிப்பிள்ளை பொன்னையாவும் பெண்
2, ஷை விசாலாட்சியும்
- தத்துவக்காரர்

எதிராக

1. இறந்த மீசாலை தெற்கு சங்கரப்பிள்ளை சிவப்பிரகாசம் பெண் 2. முத்துப்பிள்ளை
3. மீசாலை தெற்கு வேலுப்பிள்ளை குணரத்தினம்
4. மீசாலை தெற்கு வேலுப்பிள்ளை விஜயரத்தினம்
5 ஷைவேலுப்பிள்ளை நவரத்தினம்
6. ஷை எஸ். சங்கரப்பிள்ளையும் பெண் 7. ஷை இரத்தினமும்
8, கொழும்புத்துறை C. பத்மநாதனும் பெண்
9. ஷை தங்கரத்தினமும்
10, மீசாலை வேலுப்பிள்ளை மகள் செல்வரத்தினம்
11. மீசாலை வேலுப்பிள்ளை மகள் யோகரத்தினம்
12. ஷை வேலுப்பிள்ளை இராசரத்தினம்
13. ஷை வேலுப்பிள்ளை கைம்பெண் தெய்வானைப்பிள்ளை
14. கொக்குவில் தம்பிப்பிள்ளை நடராசா
15. ,, தம்பிப்பிள்ளை குமாரசாமி
16. சின்னத்தம்பி சிதம்பரப்பிள்ளையும் பெண்
17, உமையம்மாவும்
18. மீசாலை எஸ் என். சேனாதிராசாவும் பெண்
19. மாணிக்கமும்
20. வவனியா தம்பிப்பிள்ளை நமசிவாயம்
21. மீசாலை செல்லையா மகாதேவாவும் பெண்
22. மீனாட்சியும்
23. பொன்னம்பலம் தம்பையாவும் பெண்
24. அன்னபூரணமும்
25. கொக்குவில் இராமலிங்கம் சடாசிவமும் பெண்
26. செல்வநாயகமும்
27. சின்னர் ஐயாக்குட்டியும் பெண் 28. வள்ளிமுத்துவும்
29. ஆனைஇறவு பொன்னம்பலம் வேலுப்பிள்ளை
30. மீசாலை வல்லிபுரம் கைம்பெண் சின்னப்பிள்ளை
31. கல்லோயா பொன்னம்பலம் குமாரசாமி
- பிரதிவாதிகள்.

சாவகச்சேரிடிஸ்திரிக்கோட்டு 79-ம் இலக்கத் தத்துவ வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்பிரகாரம் கீழ்க்காணும் அசைவுள்ள அசைவற்றவாதனங்கள் 1963ம் ௵ தை ௴ 19ந்உ சனிக்கிழமை காலை 10 மணிக்கு சாவகச்சேரி டிஸ்திரிக் கோட்டில் அசைவுள்ள 1ம், 2ம், 3ம் பவுண் நகைகளும் பின்பு அவ்வக் காணிகட்குள் நின்று 4ம், 5ம், 6ம் 7ம் அசைவற்ற ஆதனங்களும் என்னாற் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்,

அசைவுள்ள பொருட்கள்

(1) ஒரு சோடி கல்லுவைத்த தோடு பெறுமதி	50-00
(2) ஒரு மூக்குத்தி	5-00
(3) ஒருசோடிகாதணி முருகு	5-00

அசைவற்ற ஆதனங்கள்

(4, வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்றிக் தென்மராட்சிப் பகுதி சாவகச்சேரிக் கோவிற்பற்று மீசாலை இறை மீசாலை வயல் நெ. பி 5 ஐந்துக்கெல்லை கிழக்கு முருகேசுசெல்லத்துரைக்குரிய வாதனம். வடக்கு வல்லிபுரம் கைம்பெண் சின்னப்பிள்ளைக்குரியவாதனம், மேற்கு பொன்னம்பலம் சுப்பிரமணியத்துக்கும் மறுபேருக்குமுரியவாதனம். தெற்கு நல்லதம்பி சுவாமிநாதனுக்குரியவாதனம்.

மதிப்பு ரூபா 700-00.

(5) ஷை இறை மீசாலை வயல் நெ.பர.(5) ஐந்தககெல்லைகிழக்கு வல்லிபுரம் கைம்பெண் சின்னப்பிள்ளைக்குரியவாதனம். வடக்கு சரவணமுத்து சுப்பிரமணியத்துக்குரியவாதனம். மேற்கு இராசையா செல்லையாவுக்குரியவாதனம். தெற்கு பொன்னம்பலம் சுப்பிரமணியத்துக்குரிய வாதனம். மேற்கு இராசையா செல்லையாவுக்குரியவாதனம். தெற்கு பொன்னம்பலம் சுப்பிரமணியத்துக்குரிய வாதனம்.

மதிப்பு ரூபா 700-00

(6) ஷையிறை மீசாலைவயல் நெ பி (8) எட்டுக்கெல்லை கிழக்கு தெரு வடக்கு வேலுப்பிள்ளை சிதம்பரப்பிள்ளைக்குரிய வாதனம், மேற்கு கந்தையா கைம்பெண் செல்லத்துக்குரியவாதனம். தெற்கு சின்னத்துரை பெண் தங்கம்மாவுக்குரியவாதனம்.

மதிப்பு ரூபா 600-00

(7) ஷையிறை அரியகுட்டி வளவு சி பி (8) எட்டுக்கெல்லை கிழக்கு சண்முகம் பொன்னையா பெண் தெய்வானைப்பிள்ளைக்குரிய வாதனம். வடக்கு வேலு மாணிக்கத்துக்கும் பெண் அன்னப்பிள்ளைக்குமுரியவாதனம், மேற்கு சதாசிவம் பெண் கதிராசிப்பிள்ளைக்கும் மறுபேருக்குமுரியவாதனம், தெற்கு சண்முகம் பொன்னையாவுக்கும் மறுபேருக்குமுரிய வாதனம். மதிப்பு ரூபா 1000-00.

மு. நா. மார்க்கண்டு,
கொம்மிஷனர்.

சாவகச்சேரி,
22-12-62.
M 220 28-12-62,

கோட்டு விற்பனவு விளம்பரம்

சாவகச்சேரி
டிஸ்திரிக்கோட்டில்
நாவற்குழி
செல்லையா கைம்பெண் பாக்கியம்
—வழக்காளி.

இல, 2136

எதிராக:

சாவகச்சேரியைச் சேர்ந்த மட்டுவில் தெற்கு விசுவலிங்கம் தாமோதரம்பிள்ளை —எதிராளி.

சாவகச்சேரி டிஸ்திரிக் கோட்டால் 2136-ம் இலகக வழக்குக் கட்டளைப்பிரகாரம் கீழ்க்காணு மட்டவணையில் விபரிக்கப்படுமாதனம் 1963-ம் ௵ தை ௴ 26-ந்உ சனிக்கிழமை காலை 10 மணியளவில் குறித்த காணிக்குள் நின்று என்னாற் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்

தீர்வைத்தொகை:- ரூபா 2390-ம் 30-12-60 — 7-7-61 வரை ரூபா 2000-க்கு 12 வீத வட்டியும் பின் கூடிவரும் தொகைக்கு இறுக்கும் வரைக்கும் 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 218-91 சதம். கட்டிய பணம் ரூபா 500/- கழித்து மிகுதி.

ஆதனவிடாப்பு:

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திரிக் தென்மராட்சிப் பகுதி சாவகச்சேரிக் கோவிற்பற்று மட்டுவில் தெற்கிறை மணற்காடு நில.பர. 8½. எல்லை கிழக்கு வேதவனம் கந்தையாவுக்குரிய வாதனம், வடக்கு முருகர் மார்க்கண்டுவுக்குரியவாதனம். மேற்கு காக்கேசு பொன்னையாவுக்குரிய வாதனம். தெற்கு மண்தெரு. இவ்வெல்லைக்குட் சேர்ந்த நிலம் பனைகள், தென்னைகள் மற்றும் பயிர்கள் அடங்கலிற் சொரியலாய் 14/15 பங்கு.

பதிவு இல. F 226/32.

மு. நா. மார்க்கண்டு,
கொம்மிஷனர்,
சாவகச்சேரி, 31-12-62.
M 219 28-12-62.

யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன்துறை வீதி 450-ம் இலக்கத்திலுள்ள, சைவப்பிரகாச யந்திரசாலையில், யாழ்ப்பாணம் பிறவுண்வீதி, 2ம் ஒழுங்கை, 2ம் இலக்கத்தில் வசிக்கும் திரு. ஐயம்பிள்ளை சின்னத்துரை அவர்களால் 28-12-1962 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.
ஆசிரியர், நம. சிவப்பிரகாசம்,